கிடையாது. அதேபோல, இந்த அணையையும் உடனடியாகச் சீர்செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யப்படும் என்று உறுதி அளித்துள்ளார்கள். இதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்னுடைய கிராமத்திலே இருந்த ஒரேயொரு குறையையும் நிவர்த்தி செய்து, எனக்கு நல்ல பெயரை எடுத்துத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு இந்த ஆண்டிலேயே இந்த வேலையானது துவங்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீர் நிலங்களில் புகுந்து விவசாயம் பாதிக்கப்படாத வண்ணம் ஏற்கெனவே 'ரிங்பண்ட்' போன்ற அமைப்புப் பணிகளை நாங்கள் தற்காலிகமாக மேற்கொண்டிருக்கிறோம். வெள்ளநிவாரணப் பணிகள் அடிப்படையில் வேலைகள் செய்து உடனடியாக பணிகளைத் துவங்கி சரி செய்திருக்கிறோம். நிரந்தரப் பாதுகாப்புக்கு அதிக நிதி தேவைப்படுகிறது. ஆகவேதான், அதற்காக ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் துவங்கப்படும் என்று தெரிவித்தேன். ஆகவே, இந்த ஆண்டு துவக்கப்படுமா என்பதை உறுதியாக சொல்ல முடியாது. பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி அரசு அதிகாரிகளோடு கலந்தாலோசித்து நிதி நிலைமைக்கேற்ப இந்தத் திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 128, திரு. கு. சீனிவாசன், இருக்கையில் இல்லை, திரு. கு. தங்கமுத்து, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

128—

வடுவூரில் துணை மின் நிலையம் அமைத்தல்

35578*—திரு. கு. சீனிவாசன் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி வட்டம், வடுவூர் கிராமத்தில் 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது ?

1995 மார்ச் 28]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மன்னார்குடி வட்டம் வடுவூர் கிராமத்தில் 33 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் உள்ளது.

(ஆ) துணை மின் நிலையத்தை அமைப்பதற்காக வடுவூருக்கு அருகே நிலத்தை வாங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வடுவூர் மையத்தில் ஏறத்தாழ 20,30 கிராமங்களுக்கு மையமாக இருக்கின்ற இந்தப் பகுதிக்கு குறைந்த மின் அழுத்தம் இருக்கும் சூழ்நிலையில் இதற்குத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்திருக்கின்ற அரசுக்கு, அந்தப் பகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்தத் துணை மின் நிலையம் இந்த ஆண்டு திட்டத்தில் நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசுப்பட்டு மற்றும் வடுவூர் பகுதிகளுக்கு, மன்னார்குடி, கோவில்வல்லி மற்றும் ஒரத்தநாடு ஆகிய துணை மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் அந்தப் பகுதியிலே மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது என்பது அரசினுடைய கவனத்திற்கு வந்தவுடனே, மன்னார்குடி வட்டம் வடுவூர் பகுதியிலே ஒரு 33/11 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று அரசு முடிவு எடுத்து அதற்கான நிலத்தை கையகப்படுத்துகின்ற பணிகளிலே தமிழ்நாடு மின்சார வாரியம் ஈடுபட்டது. அங்கே இடம் கிடைப்பதிலே சில பிரச்சினைகள் ஏற்பட்டது. இருந்தாலும், அரசுப்பட்டி அருகே வடுவூரில் 1.78 ஹெக்டேர் நிலம் இப்போது தேர்வு செய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட, நாகப்பட்டினம், மாவட்ட வருவாய் அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அந்த நிலத்தைக் கையகப்படுத்தியவுடனே இந்த ஆண்டு பணி துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே, இதுபோன்று பல்வேறு பிரச்சினைகள் தமிழகத்திலே வந்தபோதுதான், நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உடனடியாக அதற்குத் தீர்வு காண வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

[*1995 மார்ச் 28*

கடந்த கால ஆட்சிக் காலத்திலே வருடத்திற்கு 15 அல்லது 20 துணை மின் நிலையம் என்ற அடிப்படையிலேதான் செய்து கொண்டிருந்தார்கள். ஆகவே, புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு 100 துணை மின் நிலையங்களைத் தமிழகம் முழுவதும் அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறாரகள். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே, இந்தப் பகுதியிலே மாத்திரம் அல்ல; தமிழகம் முழுவதும் இருக்கின்ற, அந்தக் குறைந்த மின் அழுத்தம் –'லோ வோல்டேஜ்'– பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதுதான் நம்முடைய தங்கள் தலைவியினுடைய ஆணை. அந்த ஆணையை சிரமேற்கொண்டு தமிழ்நாடு மின்சார வாரியம் இந்த ஆண்டு பணியாற்றும்; நடவடிக்கை எடுக்கும். எதிர்காலத்தில் அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *129*, திரு. கே.ஏ. மனோகரன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

129—

கூட்டுறவு கடன்கள் குறித்த காலத்தில் வழங்குதல்

24610*—திரு. கே. ஏ. மனோகரன் :**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் மூலம் பிரதம கூட்டுறவு வீட்டுவசதி மற்றும் வீடுகட்டும் சங்கங்களுக்கு வழங்கப்படும் கடன், குறித்த காலத்தில் வழங்கப்பட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் மூலம் பிரதம கூட்டுறவு வீட்டுவசதி மற்றும் வீடு கட்டும் சங்கங்களுக்கு வழங்கப்படும் கடன், குறித்த காலத்தில் வழங்கப்பட அரசு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுக் கடனானது பல்வேறு நடுத்தரப்பட்ட